
# திரிபுடி

(காண்பவன் காட்சியாவதில்லை!)



ப்ரக்ஞன்

# நூல் விளக்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | திரிபுடி |
| தெளிவுரை | : | ப்ரக்ஞன் |
| வெளியீடு | : | பராபரம் |
| வகை | : | வேதாந்தம் |
| முதற்பதிப்பு | : | 2021 |
| பக்கங்கள் | : | 30 |
| அளவு | : | A5 |
| விலை | : | அக விழிப்பு |
| கணினி அச்சு | : | ஓம் கிராபிக்ஸ் |

# திரிபுடி

(காண்பவன் காட்சியாவதில்லை!)

ப்ரக்ஞன்

# திரிபுடி

## (காண்பவன் காட்சியாவதில்லை!)

### முகவுரை

அனைவருக்கும் வணக்கம்,

அத்வைத வேதாந்த பாடங்களில் இந்த 'திரிபுடி' என்ற சொல் மிக முக்கியப் பங்கு வகுக்கின்றது. நம்முடைய அன்றாட நடைமுறை வாழ்க்கையில் நாம் உபயோகிக்கும் வார்த்தைகளில் வார்த்தை என்பது எண்ணத்திலிருந்தும், எண்ணம் உள்ளத்திலிருந்தும், உள்ளம் ஆத்மாவிலிருந்தும் பிறக்கின்றன. இதுவே, "திரிபுடி" என்று அழைக்கப்படுகின்றது.

இந்த திரிபுடி எனும் வார்த்தையின் ஆழமான புரிதல் என்பது, அத்வைத ஞானத்தை அடைந்து

விட்டேன் என்று கூறும் சிலரிடமும் குழப்பமாகத்தான் இருக்கின்றது.

அதிலே, பெரும்பாலானவர்கள் **காண்பான்** அல்லது **பார்ப்பான்** என்பதை ஆத்மா என்பதாகவும், **காட்சி** அல்லது **பார்வை** என்பதை காணப்படும் பொருளாகவும் நினைத்துக் கொள்கின்றார்கள். அதனால்தான் அவர்களால், ஆத்மாவை அனுபூதியாக அடையாளம் காண முடியவில்லை.

அதற்குக் காரணம், இவர்களது ஞானம் ஏற்றி வைத்துக் கொண்ட வெறும் புற அறிவாக (**பரோக்ஷ ஞானம்**) மட்டுமே நின்று விடுகின்றது. அதாவது, மற்ற உலகியல் கல்வியைப் போன்று, இதையும் கற்றுக் கொள்கின்றார்களே தவிர, அதன் உண்மைத் தன்மையை உணர முடியாமல், **அபரோக்ஷ ஞானமாக** அனுபவமாக்க முடியாமல் இருக்கின்றார்கள் என்றால். அது மிகையாகாது.

அவர்களுக்கான ஒரு தெளிவை கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையில் இந்த நூல், '**திரிபுடி**'

என்பதை எல்லோருக்கும் எளிதாகப் புரிய வைக்க முயற்சிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக, **வார்த்தை** அல்லது **சொல்** என்பதை, ஆத்மாவின் கொள்ளுப் பேரன் என்றும், அதற்கான **எண்ணம்** என்பது பேரன் என்றும், பேரனைப் பெற்றெடுத்த **மனம்** என்பது மகன்/மகள் என்றும் பார்க்கும்போது, இவர்கள் அனைவரும் **ஆத்மா** என்ற ஒரே அம்மா/அப்பா என்பவர்களின் குடும்பம்.

இதிலே, கொள்ளுப்பேரன், பேரன், மற்றும் மகன் ஆகியோர் அனைவரும் அம்மா/அப்பா எனும் ஆத்மா இல்லாமல் உண்டாகி இருக்க முடியாது. அதாவது, இவர்கள் இருவரும் ஒன்றாக இணைந்த நிலையில் உண்டானவர்கள்தான் **மகன்/மகள், பேரன், கொள்ளுப்பேரன்** (மனம், எண்ணம், சொல்) என எல்லோருமே ஆகும்.

இதில், மாற்றுக் கருத்துக்கு இடமில்லை என்பதினால், இவர்கள் அனைவருக்கும் **அம்மா/அப்பா** எனும் ஆத்மாவின் சொத்தில் அவசியம் பங்கு உண்டு. உரிமையும் உண்டு.

அப்படியானால், ஆத்மாவின் (அம்மா/அப்பா) **சொத்து எது?**

அதுவே, சச்சிதானந்தம் (**சத் – சித் – ஆனந்தம்**) எனும் மிகப்பெரிய சொத்து.

இந்த **சச்சிதானந்தம்** என்ற ஆத்மாவின் மிகப் பெரிய சொத்துக்கு உரிமையாளர்கள் மகன்/மகள், பேரன், கொள்ளுப்பேரன் (**மனம், எண்ணம், சொல்**) என எல்லோருக்குமே பங்கு உண்டு. இதிலே, யாரும் எனக்கு இந்த சொத்து (சச்சிதானந்தம்) வேண்டாம் என்று கூறமாட்டார்கள். **அது அவர்களது உரிமை.**

அதுப்போல, இங்கு நாம் அறிய வேண்டிய அரிதான உண்மை என்னவெனில், நம்மிடம் அன்றாட உபயோகத்திலுள்ள இனிப்பு எனும் சர்க்கரையை எடுத்துக் கொள்ளுங்கள்.

அந்த சர்க்கரையை எடுத்து ஒரு டம்பளர் நீரில் நன்றாக கலக்கி விட்ட பின்பு, இப்போது, அந்த சர்க்கரை எங்கிருக்கின்றது என்று யாராலும் காட்ட முடியாது. ஆனால், அந்த சர்க்கரை இருப்பதை அறிவதற்கு, அந்த சர்க்கரை நீரை ஒரு ஸ்பூனில்

எடுத்துக் குடித்துப் பார்க்கும்போது, நம்மால் அதை உணர முடியும் அல்லவா?

மேலும், அந்த டம்பளரில் உள்ள சர்க்கரை நீர் முழுவதிலும், எங்கு சுவைத்துப் பார்த்தாலும், அந்த சர்க்கரையின் **இனிப்பு சுவை** எல்லா இடத்திலும் இருப்பதை உணர முடியும் அல்லவா?

ஆனால், அந்த சர்க்கரையை தனியாகப் பிரித்து எடுக்க முடியாது.

அதாவது, அந்த நீரில் கலப்பதற்கு முன்பாக, அதே சர்க்கரையைக் காண முடிந்தது. ஆனால், இப்போது கண்களால் காண முடியாமல், நாவில் இட்டு சுவைக்கும்போது மட்டுமே, சர்க்கரையின் இனிப்புத் தன்மையை அனைவராலும் உணர முடிகின்றது. இவைகள், நம்மிடம் உள்ள புலன்களால் உண்டாகும் அனுபவங்கள் மட்டுமே ஆகும். புலன் அனுபவங்கள் மட்டுமே கண்களிலிருந்து, நாவிற்கு மாறியுள்ளது.

இதிலே, நாம் புரிந்துக் கொள்ள வேண்டிய அரிதான உண்மை ஒளிந்துக் கொண்டுள்ளது.

அதாவது, சர்க்கரை நீர் டம்பளரில் உள்ளது. ஆனால், அந்த டம்பளருக்கு சர்க்கரையின் இனிப்பு சுவை என்றுமே தெரியாது. மேலும், அதை ஒரு ஸ்பூன் மூலமாக எடுத்து குடிக்கும்போது, அந்த ஸ்பூனுக்கும், சர்க்கரையின் இனிப்பு சுவை தெரியாது. ஆனால், அந்த சர்க்கரை நீர் நம் நாக்கை அடைந்ததும், அந்த நாக்கு சர்க்கரையின் சுவையை நன்கு உணர்கின்றது.

உண்மையில், அந்த சர்க்கரையின் இனிப்பு சுவையை நாக்குதான் உணர்கிறதா? அப்படியானால், பிணத்திற்கு அதே சர்க்கரை நீரைக் கொடுத்ததும், அந்த பிணத்தின் நாக்கு இனிக்கிறது என்று உணருமா? அல்லது கூறுமா?

நிச்சயமாக கிடையாது.

அப்படியானால், யார் அந்த இனிப்பு சுவையை உணர்கின்றார்கள்?

இதை சற்று விவேகத்தினால் விசாரம் செய்துப் பார்க்கும்போது, பல அரிய உண்மைகள் புலப்படும்.

உதாரணமாக, இதிலே டம்பளர் என்பது **உடல்**. இந்த உடலின் உள்ளே **அறிவு** அல்லது **சைதன்யம்** எனும் தெய்வீக சுவையான சர்க்கரை நீர் உள்ளது.

அதேசமயம், அந்த உடலுக்கு (டம்பளருக்கு), தன்னுள் சைதன்யம் (சர்க்கரை) இருக்கின்றது எனும் அறிவு இல்லை. இதில், அந்த உடலில் உள்ள புலன்களே ஸ்பூன் ஆகும். அந்த ஸ்பூன் எனும் புலன்கள் வழியாக சர்க்கரையின் இனிப்பு அனுபவம் பெறப்படுகிறது என்றாலும், ஸ்பூனும், சர்க்கரையின் (சைதன்யத்தின்) தெய்வீக சுவையை அறிவதில்லை.

இதிலே, **மனம்** என்பதே புலன்கள் (நாக்கு).

அந்த மனம் எனும் நாக்கு சர்க்கரையின் இனிப்பு சுவையை உணர்ந்துக் கொள்கிறது என்றாலும், உண்மையில் மனமும் (நாக்கும்) சர்க்கரையின் சுவையை நேரடியாக அனுபவிப்பதில்லை.

அதுப்போலவே, **வயிறு/புலன்கள்** போன்ற ஒட்டு மொத்த இந்த உடலும் சர்க்கரையின் இனிப்பு சுவையை உணர்வதே கிடையாது.

**ஆக, சர்க்கரையின் இனிப்பு சுவையை உண்மையில் யார்தான் அனுபவமாக்குகிறார்கள்?**

**அனுபவம் மனதிற்கா? அல்லது அறிவிற்கா?**

अहं वैश्वानरो भूत्वा प्राणिनां देहमाश्रितः |
प्राणापानसमायुक्तः पचाम्यन्नं चतुर्विधम् || 14 ||

அஹம் வைஸ்வானரோ பூத்வா பிராணினம் தேஹம் அஷ்ரித:
பிராண அபான சமாயுக்த: பச்சாமியன்னம் சதுர்விதம்.

– பகவத்கீதை.

**"நானே உயிரினங்கள் உணவை ஜீரணிக்கச் செய்யும் வயிற்றில் உள்ள வைஸ்வானரன் எனும் நெருப்புக் கடவுள்."** என்று பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் பகவத்கீதையில் கூறுவதை நினைவில் கொள்ள வேண்டும்.

அதாவது, வயிறு, கல்லீரல், கணையம், பித்தப்பை, போன்ற செரிமான அமைப்பின் உறுப்புகள் மூலம், உண்ணும் உணவின் ஜீரண சாறுகளை

ஜீரணிக்க உதவும் சக்தியாக, ஜடாக்கினியாக நானே இருக்கின்றேன்.

நானே **உணவை உண்பவனாகவும்**, உண்ட **உணவை செரிப்பவனாகவும்**, அவ்வாறு செரித்த உணவுகளை **ஆற்றல்களாக மாற்றுபவனாகவும்**, அவ்வாறு, மாற்றப்பட்ட **ஆற்றலாகவும்** (சக்தி) **நானே இருக்கின்றேன்!** என்கின்றார். அதாவது, நான்கு விதமான நிலைகளிலும் நானே இருக்கின்றேன் என்கின்றார்.

அந்த வகையிலே, இங்கு எல்லாவற்றையும் உணரக்கூடிய உயரிய **உணர்வாக/அறிவாக** ஒருவன் எப்போதும் இருக்கிறான். அனைத்தையும் அறியக்கூடிய அறிவாக அவனே இருக்கின்றான். **அதுவே ஆத்மா.**


அந்த ஆத்மாவை அறிவதில் உண்டாகும் அனேக குழப்பங்களுக்கு ஒரு எளிய தீர்வாக, இந்த நூல் நம்முடைய அறியாமையை அகற்றி, அந்த

**அறிவை/ஆத்மாவை பிரகாசிக்க வைக்கும் என்பதை பணிவன்புடன் இங்கு தெரிவித்துக் கொண்டு, இந்த திரிபுடி என்ற நூலை ஆத்ம சாதகர்களுக்காக சமர்ப்பிக்கின்றேன்.**

**நன்றி**

**என்றும் அன்புடன்,**

**பிரக்ஞன்.**



# திரிபுடி

நாம் ஒரு கடவுள் சிலையைக் காணுகின்றோம். அதை வழிபாடு செய்கின்றோம். அதிலே, நமது சிந்தனைகள் என்பது, அடிப்படையில் எவ்வாறு செயல்படுகிறது?

அதாவது, காண்பவனாகிய 'நான்' – என்னால் காணப்படும் பொருளாகிய 'கடவுள் சிலை', அதற்கு ஆதாரமாக – 'காட்சி' எனும் இந்த மூன்று அம்ஸங்கள் இதிலே அடங்கியிருக்கின்றன.

அவைகள்,

**காண்பவனாகிய நான்**
**காணப்படும் பொருளாகிய கடவுள் சிலை**
**காட்சி.**

இவ்வாறே,

காண்பவன் – காட்சி – காணப்படுபவைகள்
அறிபவன் – அறிவு – அறியப்படுபவைகள்
கேட்பவன் – கேள்வி – கேட்கப்படுபவைகள்
உணர்பவன்– உணர்வு – உணர்ச்சிகள்

ஆகிய இந்த மூன்றையும் "**திரிபுடி**" என்று வேதம் கூறுகிறது.

இந்தத் திரிபுடி இருப்பதால்தான் இந்த உலகம் ஐந்து புலன்களாலும், பகுத்தறிவாலும், இருமைகளாலும், பேதமாக நம்முடைய காட்சிக்கும், மனதிற்கும் வருகிறது. அதனால்தான், **காண்பானும், காணப்படும் பொருளும்** மனதிற்கு வேறாகத் தோன்றுகிறது.

இந்தத் திரிபுடியை இறைவன் தன் மாயா சக்தியால் படைப்புக்காக உண்டாக்கி இருக்கிறான். மனதின் இந்த பேதமை புத்தியே, **நான் வேறு!**

**என்னால் அறியப்படும் பொருள்கள் வேறு! என்ற இருமைகளை உண்டாக்கி, இறைவனை மறைத்து, இந்த உலகத்தை தோற்றுவிக்கின்றது.**

*"நட்ட கல்லை தெய்வம் என்று நாலு புட்பம் சாத்தியே*
*சுற்றி வந்து மொண மொணன்று சொல்லு மந்திரம் ஏதடா?*
*நட்ட கல்லும் பேசுமோ நாதன் உள்ளிருக்கையில்*
***சுட்ட சட்டி சட்டுவம் கறிச்சுவை அறியுமோ?"***

இதிலே, **சட்டியும், கரண்டியும்** எவ்வாறு அதிலே செய்யப்படுகின்ற காய்கறியின் சுவையை அறிய முடியாதோ? அதுப்போல, **உடலுக்கும், மனதிற்கும்** உண்மையில் ஆத்ம அனுபவம் உண்டாகாது.

அதாவது, இந்தத் திரிபுடிதான் **நான் வேறு, உலகம் வேறு, இறைவன் வேறு** என்று பேதங்களான துவைத நிலையை (இருமைகளை) உண்டாக்கு கின்றது.

ஆனால், உண்மையில் நமக்கு அந்நியமாகக் காணப்படும் திரிபுடி சகிதமான (தன் உடல் உள்பட) அனைத்தும் அறிபவனுக்கு வேறாக இல்லை.

அதாவது, அறிபவனால் **(மனதினால்)** உருவாக்கும் ஒரு மாயத் தோற்றமே அனைத்தும்.

**அறிபவன்/காண்பவன்** – மனம்
**அறிவு/காட்சி** – ஆத்மா
**அறியப்படுபவைகள்/காணப்படுபவைகள்** – மாயை.

(அதாவது, ஆத்மாவும், மனமும் ஒன்றாக இணைந்து உண்டாக்கும் மாயத்தோற்றங்கள் இந்த உலகம்.)

இதிலே, நாம் அறிய வேண்டிய அரிதான உண்மை என்னவெனில், **"காண்பவன் எப்போதும் காட்சியாவதில்லை!"** இதிலே, **காணப்படுபவைகள்** எப்போதும் இல்லை.

உண்மையில், இவைகள் அனைத்தும் **சைதன்யமான பிரம்மத்தின்** மாயா சக்தியாகிய **ஈஸ்வரனே.**

ஆக, காணப்படும் பொருள்கள் அனைத்துமே, காண்பவனாகிய **மனதினால்** படைக்கப்பட்ட **மாயா பிம்பங்கள்** எனலாம். அதாவது, **மாயை** என்பது தோன்றி, மறையக்கூடியவைகள் எனலாம்.

இதற்கான விசாரம் என்பது, பகுத்தறிவுப் பரிமாணத்தில் வந்துள்ள மனிதர்களாகிய நாம் மேற் கொள்ளும்போது, நம் விவேகத்தினால் விடைக்காண முயற்சிக்கும் நிலையில், அறியப்படுகின்ற அரிதான உண்மை என்பது, இந்த மனமே ஒன்றை விரும்பி, அதைப் படைத்து, அதை உடல் என்னும் உபாதியின் மூலம் அனுபவம் ஆக்குகின்றது. இந்த உடலாகவும் அந்த மனமே இருக்கின்றது.

அதாவது, மனம் என்பது கண்களுக்குப் புலப்படாத நுண்ணிய நிலையில் சூக்ஷுமம்

என்பதினால், அதனால், நேரடியாக எதையும் அனுபவம் ஆக்க முடியாது. அதனால், அது கண்களுக்குப் புலப்படக்கூடிய இந்த பரு உடலை பஞ்சபூதங்களின் துணையுடன் உண்டாக்கிக் கொண்டு, ஸ்தூலமாக தன்னுடைய அனைத்து அனுபவத்திற்கும் கொண்டு வருகின்றது.

அவ்வாறு, இந்த மனதினால் உண்டாக்கப்பட்ட இந்த **உடல்/புலன்கள்** மற்றும் அவைகளால் காணப் படுபவைகள் என எல்லாமே, ஒருநாள் தோன்றி, சில நாட்கள் இருந்து, பிறகு இல்லாமல் மறையும் அநித்தியங்களே.

ஆக, இவ்வாறு, இவைகள் வந்து போகின்றக் காரணத்தினால், இவைகளை **மாயை/மித்யா** என்கின்றோம்.

எனவே, இருப்பது இரண்டற்ற **ஒன்று மட்டும்தான்!**

அது எது?

அதுவே, எல்லாவற்றையும் அறியும் அறிவு.

அதுவே, ஆத்மா/ப்ரம்மம்.

அந்த ஆத்ம சைதன்யமே நித்தியம். அதைத்தான் வேதத்தின் மகா வாக்கிய உபதேசமாக, "ப்ரம்மம் சத்தியம்! ஜகத் மித்யா!" என்று கூறுகின்றது.

அந்த ஆத்மாவுக்கு/அறிவுக்கு பிறப்பும் இல்லை! மாற்றங்களும் இல்லை! இறப்பும் இல்லை!

அது வருவதும் இல்லை! போவதும் இல்லை!

ஆகவே, வந்து போகின்றவைகள் எல்லாமே, மனம் கற்பித்துக் கொண்ட மாயத் தோற்றங்களே. ஆதலால், காணப்படுபவைகள் காண்பவனுக்கு வேறாக இல்லை.

அதேசமயம், **காண்பவன் எப்போதும் காட்சியாவதும் இல்லை.**

ஆனால், **காண்பவன்** (மனம்) தன்னை இழக்கும்போது, **காட்சி** (ஆத்மா) மட்டும் இருப்பதைக் கண்டு, **உள்ளது உள்ளபடி உணரப்படும்** உண்மை நிலை உண்டாகின்றது.

அதுவே, **அறிவு. சைதன்யமாகிய பிரம்மம்.**

அந்த பிரம்மமே அனைத்தையும் அறியும் அறிவாக, உணர்வாக, ஆத்மாவாக எப்போதும் விளங்கிக்கொண்டு இருக்கிறது.

ஆகவே, அந்த அறிவின் அதிர்ஷ்டானத்தில், திரிபுடியை உண்டாக்கும் ஈஸ்வரனாகிய மாயையை அறிந்துக் கொள்ளாதவரை, இவ்வாறு தோன்றி, மறையக்கூடிய பொய்யான தோற்றங்கள் எல்லாம் **காண்பவன்** (மனம்) மூலம் மட்டுமே காணப்படுகிறது

அவ்வாறு காணப்படுபவைகள் யாவும் காண்பவனுக்கு வேறாக இல்லை. மேலும், அவைகளைக் காண்பவன் ஒருபோதும் காட்சியாக முடியாது. அதாவது, மனம் எப்போதும் அறிவாக முடியாது.

இந்த பேருண்மையை அறியும்போது, சம்சாரம் எனும் பிறப்பு – இறப்பு இல்லாமல் போகின்றது.

இதை ஆத்ம ஞானத்தால் மட்டுமே அறிந்து, திரிபுடியாகிய இந்த மாயை உணர்ந்து, உடல் எனும் உபாதியின் துணைக் கொண்டு, அஹங்காரம் கொண்ட அறியாமை மனதிற்கு, அந்த தூய அறிவைக் காட்டிக் கொடுத்து, மனம் தன்னுடைய தனித்துவத்தை இழக்கும்போது மட்டுமே, அது தன் சுயவுணர்வில் சொரூபமாக மாற முடியும். ஆக, ஆத்ம ஞானம் என்பது, இறைவ(தன்)னைப் பற்றிய தெளிவு.

காண்பவன் – காட்சி – காணப்படுபவைகள்

பார்ப்பான் – பார்வை – பார்க்கப்படுபவைகள்

அனுபவிப்பவன் – **அனுபவம்** –
அனுபவிக்கப்படுபவைகள்
அறிபவன் – **அறிவு** – அறியப்படுபவைகள்
கேட்பவன் – **கேள்வி** – கேட்கப்படுபவைகள்
உணர்பவன்– **உணர்வு** – உணர்ச்சிகள் அல்லது
உணரப்படுபவைகள்

என, இந்த மூன்றிலும் நடுநாயகமாக இருப்பது **ஆத்மா.**

இந்த ஆத்மா தன்னில் தானே ஈஸ்வரனாக பிரதிபிம்பிப்பதின் வாயிலாக, தன்னுடைய பிம்பமாகிய மனதின் மூலம், **காண்பவன், அறிபவன், கேட்பவன் உணர்பவன்** போன்றவைகளைக் கொண்டு, மூன்றாவதாகவுள்ள **காணப்படுபவைகள், அறியப் படுபவைகள், கேட்கப்படுபவைகள்** மற்றும் **உணரப் படுபவைகள்** என உண்டாக்கிக் கொள்கிறது.

இந்த இடத்தில்தான் நாம் விழித்துக் கொள்ள வேண்டும். நாம் இந்த திரிபுடியை எப்படிப் புரிந்து

வைத்துக் கொண்டுள்ளோம் என்பதைப் பொருத்து, **ஆத்மா/அறிவு** பிரகாசிக்கும்.

இதிலே, அட்டவணை மூலம் **சரியானப் புரிதல்** கொடுக்கப்பட்டுள்ளது.

| **அறிவு – சிவம்** | **மனம் – சக்தி** | **மாயத்தோற்றங்கள்** |
|---|---|---|
| காட்சி | காண்பவன் | காணப்படுபவைகள் |
| பார்வை | பார்ப்பான் | பார்க்கப்படுபவைகள் |
| அனுபவம் | அனுபவிப்பவன் | அனுபவிக்கப்படுபவைகள் |
| அறிவு | அறிபவன் | அறியப்படுபவைகள் |
| கேள்வி | கேட்பவன் | கேட்கப்படுபவைகள் |
| உணர்வு | உணர்பவன் | உணரப்படுபவைகள் |
| ஞானம் | ஞாதுரு | ஞேயம் |

ஆக, மனதினால் உண்டாக்கப்பட்ட **மாயத் தோற்றங்கள்** மனதிற்கே உரித்தானது என்பதினால்,

காண்பவன் – காணப்படுபவைகள்
அறிபவன் – அறியப்படுபவைகள்
கேட்பவன் – கேட்கப்படுபவைகள்

உணர்ச்சி– உணரப்படுபவைகள்

ஆகிய இந்த **மனம் – மாயத்தோற்றம்** ஆகிய இரண்டையும் என்றுமே பிரிக்க முடியாது. அதாவது, காண்பவன் காணப்படுபவைகளாக இருக்கலாம். ஆனால், **காண்பவன் காட்சியாக முடியாது.**

அதேசமயம், இந்த மனம் தோற்றுவிக்கும் மாயத் தோற்றங்கள் எல்லாமே, ஒன்றேயாகிய தூய அறிவின் **இருப்பில்/அதிர்ஷ்டானத்தில்** மட்டுமே உள்ளது என்பதை மறந்து விடக்கூடாது.

ஆக இருப்பது **அறிவு/ஆத்மா** மட்டுமே.

ஆனால், அறிவு **பிரகாசிக்கும்/பிரதிபிம்பிக்கும்** உபாதியாகிய மனம் மூலம், அது தன்னை அறிகின்றது. அந்த வகையிலே, அறிவும், மனமும் சேர்ந்து இருந்தால் மட்டுமே, **ஆத்மா** அறியப்படும்.

அதுவே, **அறிவு/ஆத்மா** மட்டும் தனித்து இருந்தால், அங்கு **ஆத்ம அனுபவம்** எப்போதும் உண்டாகாது.

எனவே, **சிவம்/அறிவு** மற்றும் **சக்தி/மனம்** ஆகிய இரண்டும் ஒன்றாகச் சேர்ந்திருந்தால் மட்டும்தான் இந்த **உலகம்/படைப்பு** அனுபவமாக உண்டாக முடியும்.

**சிவம் இல்லையேல் சக்தி இல்லை.** ஆக, சிவமும், சக்தியும் சேர்ந்ததுதான் **உலகம்.** வெறும் **சக்தி** (மாயை) மட்டும் தனித்து இருக்க முடியாது. அதாவது, **மனம் மட்டும் தனித்து செயல்பட முடியாது. ஆனால், ப்ரம்மம் மட்டும் தனித்து இருக்க முடியும்.**

அப்போது, ப்ரம்மத்திற்கு என எந்த அனுபவமும் கிடையாது. எனவே, **ப்ரம்மம் மட்டும் தெரிந்தால், உலகம் தெரியாது. உலகம் மட்டும் தெரிந்தால், ப்ரம்மம் தெரியாது.**

காரணம், அறியாமை எனும் இருமைகளால் மனம் சூழப்பட்டிருக்கும்போது, ஒன்றேயாகிய தூய **அறிவு/ப்ரம்மம்** மாயையினால் மறைக்கப்படுகிறது எனும் பேருண்மையை நன்கு உணர வேண்டும்.

அந்த அறியாமை மனதிற்கு அறிவைக் காட்டிக் கொடுக்கும்போது மட்டுமே, அந்த மனம் தன்னுடைய அறியாமையை உணர்ந்து, தன் தனித்துவத்தை இழந்து, **அஹங்கார/மமகாரமற்ற** நிலையில், இருப்பது ஒன்றே! அது **அறிவு/ப்ரம்மம்** மட்டுமே! என நன்கு உணர்கிறது.

இதிலே, எப்பொழுதெல்லாம் **காண்பவன், அறிபவன், கேட்பவன், உணர்பவன்** என்கின்ற நிலைக்கு "**மனம்**" உட்படுகின்றதோ? அப்பொழுதே அங்கு இருமைகள் உண்டாகி, **இறைவன்** (அறிவு) மறைக்கப்படுகின்றது.

ஆக, இறை அனுபவம் என்பது, விழிப்பு நிலையில், இருமைகளற்ற நிலையில் உண்டாவதால்,

மனம் **"நான்"** எனும் தன்னுடைய தனித்துவத்தை இழந்து, ஒட்டுமொத்த மனமாகிய **ஈஸ்வர மனதில்** இரண்டற்ற நிலையில் இணைந்து, **அனுபவிப்பவன் – அனுபவம் – அனுபவித்தல்** ஆகிய **திரிபுடி** எனும் இம்மூன்றும் அறியப்படுவதே **ஆத்மஞானம்** ஆகும்.

அப்போது மட்டும்தான் இங்கு "**இருப்பதெல்லாம் இறைவனே**" என்பதும், **சர்வம் ப்ரம்ம மயம்** என்பதும் புரியவரும். எனவே, '**எல்லாம் இறைவனே**' என்பது, தன் உள்ளத்திலே இருமைகளற்ற நிலையிலே உணர்வது ஆகும். மேலும், **பிரஞ்ஞை, உணர்வு, அறிவு, ஆன்மா, உயிர், அன்பு** என்ற அனைத்து மொழி அறிவுகளுக்கும் அப்பாற்பட்ட அந்த ஏக அறிவின் பிரதிபிம்ப வெளிப்பாடே இந்த **பிரபஞ்ச மனம்** எனும் **ஈஸ்வரன்** ஆகும்.

ஆக, பிரபஞ்சமனம்/ஈஸ்வரன் என்பவனே **காண்பவன்** என்றும், அந்த **காண்பவன் எப்போதும் காட்சியாவதில்லை!** என்றும் நன்கு அறிந்துக் கொள்ள வேண்டும்.

அதைவிடுத்து காண்பவனை/பார்ப்பவனை **ஆத்மா/அறிவு** என தவறாகப் புரிந்துக் கொள்ளக் கூடாது.

மேலும், **காட்சி/அறிவு** என்பது **ஆத்மா** என்பதினால், அதுமட்டுமே, **காண்பான், காணப்படும் பொருள்** போன்ற எல்லாவற்றிற்கும் **சாக்ஷியாக** இருந்துக்கொண்டு, எதனுடனும் சம்பந்தப்படாமல். தன்னில்தானாய், தன்மயமாய் **இருப்பு** கொண்டுள்ளது.


அதுவே, **சத்சிதானந்தம்** ஆகும்.

**சத்** – இருப்பு
**சித்** – அறிவு
**ஆனந்தம்** – பூரண திருப்தி.

🙏ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!! 🙏

# திரிபுடி

(காண்பவன் காட்சியாவதில்லை!)



ப்ரக்ருன்